CC 8/2016

18.08.2022

பு.சா.1

பு.சா.1 கு.ப.ம.எண்.4834/2022-ன் கீழ் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

(மேற்படி சாட்சியானவர் வழக்கின் ஆவணங்களை பார்த்து சாட்சியமளிக்க ஆட்சேபனை இருப்பதாக எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆட்சேபனை தெரிவித்தார்கள். சாட்சியானவர் சம்பவத்தின்போது காவல்துறை ஆய்வாளராக தனது பணியை மேற்கொள்ளும்போது மேற்கண்ட நடடிவக்கைககள் குறித்து சாட்சியமளிப்பதால் நீதிமன்றமானது மேற்படி எதிரிகள் தரப்பு ஆட்சேபனையை நிராகரித்து சாட்சியை வழக்கு ஆவணங்களை பார்த்து சாட்சியமளிக்க அனுமதியளித்து உத்தரவிடுகிறது.)

1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

1. வழக்கு சம்பந்தப்பட்ட வாகனத்தை நான் கைப்பற்றும்போது நான் பொள்ளாச்சி மேற்கு காவல் நிலைய ஆய்வாளராக பணியில் இருந்தேன். நான் வாகன தணிக்கை எனது சரகத்திற்குட்பட்ட பகுதியில்தான் மேற்கொள்ள வேண்டும் என்றால் பொதுவாக ஒவ்வொரு காவல் ஆய்வாளரும் இரவு ரோந்தின்போது பொள்ளாச்சி உட்கோட்டம் முழுவதும் ரோந்து செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2. மேற்படி அனுமதியானது இரவு ரோந்துபணிக்கு மட்டும் கொடுக்கப்பட்டதா இதர பணிகளுக்கும் கொடுக்கப்பட்டதா என்றால் அது பொதுவானதாகும். இரவு ரோந்து பணிக்குதான் கொடுக்கப்ப்ட்டது. மேற்படி இரவு ரோந்து பணியானது இரவு 08.00 மமணியில் இருந்து அடுத்தநாள் காலை 08.00 மணிவரை ஆகும். சில நேர்ங்களில் காவல் கண்ணானிப்பாளர் உத்தரவின்பேரில் பணியானது காலநேரம் குறிப்பிடாமல் வழங்கப்படும். மேற்படி உத்தரவு யார் பிறப்பித்தார்கள் என்றால் எனது மேலதிகாரியான துணை காவல்

கண்காணிப்பாளர் ஆகும்.

3. மேற்படி அவரின் வாய்மொழி உத்தவின்பேரிலே அனுமதியளிக்கப்பட்டுள்ளது. வழக்கின் வாகனங்கள் கைப்பற்றப்பட்ட நல்லப்பா சந்திப்பிற்கு எத்தனை மணிக்கு நானும் என்னுடன் காவலர்களும் வந்தார்கள் என்றால் அதிகாலை 03.00 மணி இருக்கும். நான் வாகன தணிக்கை செய்தபோது இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட லாரியில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் இரண்டு நபர்கள்.

4, என்னுடன் அப்போது எத்தனை காவலர்கள் உடனிருந்தார்கள் என்றால் சுமார் 10 பேர்வரை கிழக்கு காவல் நிலைய மற்றும் மகாலிங்கபுரம் காவல் நிலைய காவலர்கள் இருந்தார்கள். அவர்கள் உதவி ஆய்வாளர் தௌலத்நிஷா, சிறப்பு உதவி ஆய்வாளர்கள் பாலகிருஷ்ணன், மாசிலாமணி, தலைமைக்காவலர்கள் பழனிச்சாமி, ஏசுபாலன், சுந்தரராஜன், சம்பத்குமார் மற்றும் முதல் நிலைக்காவலர்கள் கார்த்திக், ரவி, வெங்கடாச்சலம் ஆகியோர் ஆவார்கள்.

5. மேற்படி லாரியை நிறுத்தி அதில் இருந்தவர்களை இறங்குமாறு கூறினேனா என்றால் கூறினேன் அவர்கள் இறங்கி ஓடிவிட்டார்கள். குறிப்பாக மேற்படி லாரிய எந்த இடத்தில் நிறுத்தினார்கள் என்றால் நினைவில்லை. மேற்படி லாரியின் இருந்து ஓடியவர்கள் எந்த திசையில் ஓடினார்கள் என்றால் நினைவில்லை. மேற்படி ஓடிய நபர்களை என்னுடன் இருந்த காவலர்கள் துரத்தி பிடித்தார்களா என்றால் வாகனத்தை தணிக்கை செய்ததால் அவர்கள் ஓடிய பின்புதான் பார்த்தோம்.

6. மேற்படி நபர்களை என்னுடன் இருந்த காவலர்கள் துரத்தி பிடிக்க முயற்சி செய்தார்களா என்றால் நினைவில்லை. மேற்படி லாரியை தணிக்கை செய்தபோது லாரியின் உள் என்ன இருந்தது என்றால் சுமார் 6 ½ டன் எடையுள்ள மரக்கட்டை துண்டுகள் இருந்தது. சுமார் 6 ½ டன் எடை இருந்தது என்பது எதன் அடிப்படையில் கூறுகிறேன் என்றால்

வண்டியில் இருந்த கட்டையின் அளவை கணித்துதான் கூறுகிறேன்.

7. மேற்படி மரக்கட்டைகள் எந்த வகையான மர இனத்தை சேர்ந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி லாரியை பிடித்த பின்பு என்ன நடவடிக்கை மேற்கொண்டேன் என்றால் மேற்படி லாரியை மகாலிங்கபுரம் காவல் நிலையத்தில் நிறுத்தி வைத்துவிட்டு மாவட்ட VHF வாக்கிடாக்கியில் மேற்படி நபர்கள் ஓடியது குறித்து தகவல் தெரிவித்தேன். நான் மேற்கு காவல் நிலைய காவல் நிலைய காவல் ஆய்வாளராக இருக்கும் நிலையில் எனது காவல் நிலையத்திற்கு மேற்படி லாரியை எடுத்துச்செல்லாமல் மகாலிங்கபுரம் காவல் நிலையத்திற்கு எடுத்து சென்றதற்கு காரணம் என்னவென்றால் மேற்படி மகாலிங்கபுரம் காவல் நிலையம் அருகாமையில் இருந்ததாலும் மேற்படி லாரி கைப்பற்றப்பட்ட இடமானது மகாலிங்கபுரம் காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்டதாலும் அங்கு எடுத்துச்சென்றேன்.

8. மேற்படி மகாலிங்கபுரம் காவல் நிலையத்திற்கு உட்பட்ட இடத்தில் லாரி கைப்பற்றப்பட்டுள்ளதால் மகாலிங்கபுரம் காவல் நிலைய ஆய்வாளருக்கு தகவல் தெரிவிக்கவேண்டும் என்றால் சரிதான். நான் மகாலிங்கபுரம் காவல் நிலைய பாரா காவலர்களிடம் வண்டியை நிறுத்தியபோதே தெரிவித்தேன். பொதுவாக எனது சரகத்திற்குட்படாத இடத்தில் கொலை சம்பவம் ஏற்பட்டாலும் அதனை நான் நேரில் பார்த்தாலும் அது குறித்து வழக்கு விசாரணை நான் மேற்கொள்ளவேனா அல்லது சம்பந்தப்பட்ட சரக காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிப்பேனா என்றால் ஒரு காவல் ஆய்வாளர் எந்த இடம் சென்றாலும் சம்பவ இடத்தில் அவர் இருப்பதை பொருத்து ஒரு காவல் ஆய்வாளராக அவர் செய்யவேண்டிய பணிகளை செய்து முடித்து பின்பு அது குறித்து அவரது மேலதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.

9. மேற்படி வாகனத்தை நிறுத்தியபோது அது சம்பந்தமாக மகாலிங்கபுரம் காவல் ஆய்வாளரிடம் தகவல் தெரிவித்தேனா என்றால் இல்லை. காவல் நிலைய பாரா காவலரிடம்

தகவல் தெரிவித்தேன் மேலும் அது சம்பந்தமாக இரவு ரோந்து காவல் ஆய்வாளர் என்ற முறையில் எனது மேலதிகாரிகளுக்கும் தகவல் தெரிவித்துள்ளேன். மேற்படி லாரியை பிடித்தபோது நான் வனத்துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தேனா என்றால் இல்லை அது குறித்து எனது மேலதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தேன்.

10. மேற்படி தகவலுக்கு பின்னர் ராரியின் இருந்து இறங்கி ஓடிய நபர்களை பிடிப்பதற்கு எனக்கு உத்தரவு வழங்கப்பட்டதா என்றால் வாய்மொழி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி லாரியில் இருந்து ஓடிய நபர்களை லாரியில் இருந்து இறங்கி ஓடிய அன்றையதினம் எனக்கு அடையாளம் தெரியாது என்றால் சரிதான். மேற்படி லாரியை மகாலிங்கபுரம் காவல் நிலையத்தில் ஒப்படைத்தற்கு ஆவணம் எதுவும் உண்டா என்றால் ஆவணம் உண்டு.

11. மேற்படி காவல் நிலைய பாரா காவலர்கள் அது குறித்து எழுதி வைத்திருப்பார்கள். மேற்படி லாரியானது இரண்டு நாட்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது என்றும் அதன்படி அந்நாட்களில் மேற்படி லாரிக்கு மற்றும் லாரியில் உள்ள பொருட்களக்கு ஏற்படும் சேதத்திற்கு பாரா காவலர்கள் தான் பொறுப்பு என்றால் பொதுவாக நிலைய பாரா காவலர்கள் அவர்களது பணிக்கு பின்னர் நிலைய பொறுப்பு அதிகாரியிடம் ஒப்படைத்துவிடுவார்கள். பின்னிட்டு நிலைய பொறுப்பு அதிகாரியே மேற்படி பொருட்களுக்கு பொறுப்பாவார்.

12. மேற்படி லாரி மற்றும் அதில் உள்ள பொருட்களானது எந்த காவல் உதவி ஆய்வாளரிடம் ஒப்படைக்கப்பட்டது என்றால் எனக்கு நினைவில்லை. இரண்டு தினங்கள்வரை மேற்படி நிறுத்தி வைக்கப்பட்ட லாரியை நான் சென்று பார்த்தேனா என்றால் எனக்கு நினைவில்லை. மேற்படி லாரியின் பதிவெண்னை வைத்து அதன் உரிமையாளர் யார் என்று நான் விசாரணை மேற்கொண்டேனா என்றால் இல்லை.

13. பின்னிட்டு எதிரிகளை நான் எப்போது பிடித்தேன் என்றால் மேற்படி வழக்கின்

தொடர்ச்சியாக ஓடிப்போன இரு நபர்களை தேடிக்கண்டுபிடிக்க பல இடங்களில் வாகன தணிக்கை செய்தோம். அப்போது 21.08.2013 அன்று சுமார் காலை 08.00 மணிக்கு நல்லப்பா தியேட்டர் சந்திப்பில் வாகன தணிக்கையில் இருந்தபோது பொள்ளாச்சி ரோட்டில் வடக்கில் இருந்த தெற்கு நோக்கி வந்த KL 41 B 2929 இனோவா காரை நிறுத்தி தணிக்கை செய்தபோது அதில் இருந்த நபர்கள் தங்கள் முகவரிகளை முன்னுக்கு பின் முரணாக எங்களுக்கு சந்தேகம் வரும்படி கூறியதால் எனது விசாரணை முடிவில் ஒரு நபர் தனது பெயர் ரவி என்றும் கூறினார்.

14. அவர் மேற்படி 19.08.2013 அன்று நான் கைப்பற்றிய லாரியின் ஓட்டுநர் என்று தெரிவித்ததின்படி மேற்படி நல்லப்பா தியேட்டர் சந்திப்பில் அவருடன் வந்த 4 நபர்களை கைது செய்தேன். மேற்படி கைது செய்த 5 நபர்களை எங்கு வைத்து விசாரித்தேன் என்றால் மகாலிங்கபுரம் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தேன். அப்போது அங்கு காவல் ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர் இருந்தார்களா என்றால் உதவி ஆய்வாளர் நிலையத்தில் இல்லை. காவல் ஆய்வாளர் அவரது அலுவலகமான கிழக்கு காவல் நிலையத்தில் இருந்திருப்பார். நான் விசாரித்தபோது காவல் நிலைய காவலர்கள் மட்டுமே இருந்தார்கள்.

15. மேற்படி நான் கைது செய்த நபர்களை எனது காவல் நிலையத்தில் வைத்து விசாரிக்காமல் மகாலிங்கபுரம் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்ததற்கு காரணம் என்ன என்றால் மகாலிங்கபுரம் காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதியில் லாரி மற்றும் ஆட்களை பிடித்தால் அங்கு வைத்து விசாரித்தேன். நான் விசாரித்தபோது மேற்படி கைது செய்த நபர்களிடம் இருந்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் நினைவில்லை.

16. நான் மேற்படி நபர்களை கைது செய்தபோது என்னுடன் எத்தனை காவலர்கள் உடனிருந்தார்கள் என்றால் நினைவில்லை. நான் குடோனில் எப்படி என்ன

கைப்பற்றினேன் என்றால் ஓட்டுநர் ரவி என்பவரின் வாக்குமூலத்தின்படி ASD புரம் ராம்குமார் என்பவரின் குடோனில் லாரியில் உள்ளதுபோல் செம்மரக்கட்டைகள் இருந்ததாக கூறினார். அதன்படி மேற்படி குடோனுக்கு சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு அது குறித்து உயர் அதிகாரிகளுக்கு நான் தகவல் சொல்லி எனது உயர் அதிகாரிகள் வனத்துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தார்கள்.

17. நான் சென்று பார்த்தபோது மேற்படி குடோனில் எவ்வளவு மரக்கட்டைகள் இருந்தது என்றால் நினைவில்லை. மேற்படி குடோனுக்கு நான் சென்றபோது அதன் உரிமையாளர் ராம்குமாரை விசாரித்தேனா என்றால் அதிக நாட்களாகிவிட்டதால் நினைவில்லை. மேற்படி குடோனை நான் பூட்டி சீல் வைத்தேனா என்றால் இல்லை. எப்போது நான் வழக்கு கோப்புகளை யாரிடம் ஒப்படைத்தேன் என்றால் 21.08.2013 அன்று வனத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தேன்.

18. மேற்படி குடோனிற்கு தகவல் தெரிவித்ததின் அடிப்படையில் வனத்துறை அதிகாரிகள் வந்துவிட்டார்கள் என்றாலும் அவர்களும் செம்மரக்கட்டைகளை பார்வையிட்டார்கள் என்றாலும் சரிதான். பின்னிட்டு நான் தனி அறிக்கை வனத்துறை அதிகாரிகளிடம் கொடுத்துவிட்டு சென்றுவிட்டேன். மேற்படி எதிரிகளை வனத்துறை அதிகாரிகளிடம் எந்த இடத்தில் வைத்து ஒப்படைத்தேன் என்றால் மேற்படி குடோன் அருகாமையில் எதிரிகளை ஒப்படைத்தேன். பின்னிட்டு வனத்துறையினர் அப்போது மேற்கொண்ட நடவடிக்கை குறித்து எனக்கு தெரியாது.

19. மேற்படி குடோனானது மகாலிங்கபுரம் காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்டது என்றால் எனக்கு நினைவில்லை. நான் தனி அறிக்கையில் கூறியிருப்பதுபோல் 19.08.2013 அன்று நாங்கள் வாகன தணிக்கை செய்ததாக கூறியிருப்பது பொய்யான தகவல் என்றால் சரியல்ல. 19.08.2013 அன்று நான் லாரியை கைப்பற்றியதாகவும் அதை மகாலிங்கபுரம் காவல்

நிலையத்தில் ஒப்படைத்தாக கூறியிருப்பதும் தவறு என்றால் சரியல்ல. 21.08.2013 அன்று நான் எதிரிகளை கைது செய்ததாக கூறியிருப்பது தவறு என்றால் சரியல்ல.

20. நான் சொல்லியிருப்பதுபோல் குறிப்பிட்ட தேதியில் குறிப்பிட்ட இடத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் புள்ளியியல் கணக்கிற்காக தயார் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. இவ்வழக்கு குறித்த நடவடிக்கைகள் அனைத்தும் மகாலிங்கபுரம் காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட இடத்தில் நடைபெற்றிருப்பதாக கூறப்படும் நிலையில், உண்மையில் அவ்வாறு நிகழ்ந்திருந்தால் மகாலிங்கபுரம் காவல் நிலைய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருப்பார்கள் என்றால் சரியல்ல.

21. 1, 2 எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் வழக்கில் கைப்பற்றப்பட்ட லாரிக்கும் செம்மரக்கட்டைகளுக்கும் 1, 2 எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. 1, 2 எதிரிகளை நான் சொன்ன இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றால் சரியல்ல.

<u>3 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

(உணவு இடைவேளைக்காக 3 முதல் 6 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

1. 1ம் எதிரி எனது விசாரணையில், 3ம் எதிரி டசெல்போனில் அழைத்து 1, 2 எதிரிகளை பாலக்காடு ரோடு, முத்துருக்கு வரச்சொல்லி அங்கு 1, 2 எதிரிகளை அழைத்துக்கொண்டு 3ம் எதிரி கேரளா சென்று இரவு தங்கிவிட்டதாக கூறியுள்ள நிலையில் கேரளாவில் எங்கு என்று தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை.

2. நான் 3ம் எதிரி 1, 2 எதிரிகளை அழைத்துக்கொண்டு கேரளா சென்று தங்கி அடைக்கலம் கொடுத்தாக சொல்லியுள்ள சங்கதிகள் பொய் என்றாலும் உண்மையிலேயே சம்பவம் நடந்திருந்தால் நான் விசாரித்து தெரிந்திருப்பேன் என்றாலும் சரியல்ல. நான்

வனத்துறை அதிகாரியிடம் கொடுத்த தனி அறிக்கையில் வழக்கு சம்பந்தமாக மேற்கொண்ட வாகன தணிக்கை குறித்தும் அப்போது என்னுடன் இருந்த காவலர்கள் குறித்தும் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன்.

3. மேற்படி தனி அறிக்கையில் 21.08.2013 ல் என்னுடன் வாகன தணிக்கையின்போது காவல் உதவி ஆய்வாளர் தௌலத்நிஷா, சிறப்பு உதவி ஆய்வாளர்கள் பாலகிருஷ்ணன், மாசிலாமணி, தலைமைக்காவலர்கள் பழனிச்சாமி, ஏசுபாலன், .சுந்தர்ராஜ், சம்பந்குமார், முதல் நிலை காவலர் கார்த்திக், ரவி, வெங்கடாச்சலம் இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன்.

4. நான் எனது தனி அறிக்கையுடன் வழக்கு சம்பந்தமாக வாகன தணிக்கை செய்தபோது என்னுடன் இருந்வர்கள் விபரம் பட்டிலிட்டு வனத்துறை அதிகாரிகளிடம் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி இனோவா காரை யார் ஓட்டி வந்தார் என்றால் நினைவில்லை. மேற்படி இனோவா காரின் உரிமையாளர் யார் என்று நான் தெரிந்துகொண்டேனா என்றால் அது குறித்து நான் விசாரணை செய்யவில்லை.

5. நான் வழக்கு சம்பந்தமாக சோதனைக்கு சென்ற குடோனானது ராம்குமார் என்பவருக்கு சொந்தமானது என்று எனது விசாரணையில் தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். மேற்படி ராம்குமார் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி எனது தனி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி குடோனில் செம்மரக்கட்டைகள் இல்லை என்றாலும் அவ்வாறு இருந்திருந்தால் அதன் உரிமையாளர் மீது நடவடிக்கை எடுக்க எனது தனி அறிக்கையில் குறிப்பிட்டிருப்பேன் என்றால் சரியல்ல.

6. நான் கூறுவதுபோன்று வழக்கின் 1, 2 எதிரிகளுக்கும் 3 முதல் 6 எதிரிகளுக்கும் இடையே எவ்வித தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1, 2 எதிரிகள் ஆந்திராவையும் 3 முதல் 6 எதிரிகள் கேரளாவையும் சேர்ந்தவர்கள் என்றாலும் சரிதான். 3 முதல் 6 எதிரிகள்

எர்ணாகுளத்தில் இருந்து ஏர்வாடிக்கு சென்றுவிட்டு திரும்பவரும்போது பொள்ளாச்சியில் வைத்து சட்ட விரோதமாக அவர்களை கைது செய்தேன் என்றால் சரியல்ல.

7, 3 முதல் 6 எதிரிகளுக்கு தமிழ்மொழி தெரியாது என்ற காரணத்தினால் மட்டுமே அவர்களை இவ்வழக்கில் கைது செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 3 முதல் 6 எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் வழக்கில் கைப்பற்றப்பட்ட லாரிக்கும் செம்மரக்கட்டைகளுக்கும் 3 முதல் 6 எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. 3 முதல் 6 எதிரிகளை நான் சொன்ன இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/E.Manikandan)
Judicial Magistrate No. II,
Pollachi